# பீகாரில் பேசியதை தமிழ்நாட்டில் பேச மோடிக்கு தைரியம் உண்டா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இருந்தாலும், பொறுப்புகளாக இருந்தாலும் தேடி வரும். அப்படி தேடி வந்த பொறுப்பை தான் இன்றைக்கு அவர் ஏற்றுக்கொண்டு நம்முடைய மணி, பேருக்கு ஏற்றார்போல் மணியாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால், அது மிகையாகாது!

இப்படிப்பட்ட ஒரு செயல்வீரருடைய இல்லத்தில் நடைபெறக்கூடிய இந்த மணவிழா நிகழ்ச்சியில் பங்கேற்கின்ற நேரத்தில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன்.

நேற்றைய தினம், மிக முக்கியமான தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தை சென்னையில் நடத்தி முடித்துவிட்டு, நானும், நம்முடைய தொல் திருமாவளவன் அவர்களும், மற்றவர்களும் இன்றைக்கு வந்திருக்கிறோம்.

நேற்று நாம் அந்தக் கூட்டத்தைக் கூட்டி பல்வேறு கருத்துக்களை, ஆலோசனைகளை எல்லாம் வழங்கி இருக்கிறோம். முக்கியமான தீர்மானத்தையும் நிறைவேற்றி இருக்கிறோம் – அது என்ன என்பதும் உங்களுக்குத் தெரியும்.

### தேர்தல் ஆணையத்தின் திட்டமிட்ட சதி!

அடுத்த ஆண்டு நாம் எதிர்கொள்ள இருக்கக்கூடிய தமிழ்நாடு தேர்தலை அடிப்படையாக வைத்து வாக்காளர் பட்டியலில், ஏற்பட்டிருக்கக்கூடிய SIR என்ற ஒரு திட்டத்தை அவர்கள் மையப்படுத்தி, சீராய்வு என்ற பெயரில், சூழலில், ஒரு தீய செயலை, ஒரு சதிச் செயலைச் செய்ய தேர்தல் ஆணையம் திட்டமிட்டிருக்கிறது. அதை தடுப்பதற்கான முயற்சியில், நம்முடைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து பேசி தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

அங்கே உரையாற்றிருக்கின்ற அத்தனை பேரும், நேர்மையாக தேர்தலை நடத்த வேண்டும்; உண்மையான வாக்காளர் பட்டியல் அவசியம் என்ற கருத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அதற்குரிய கால அவகாசம் கொடுக்க வேண்டும். பதற்றம் இல்லாத சூழலில்தான் அதை செய்ய வேண்டும். அப்படியில்லாமல், தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கக்கூடிய இந்த சூழ்நிலையில், முழுமையான திருத்தப் பணிகள் செய்ய தேர்தல் ஆணையம் நினைக்கிறது. அதற்குக் காரணம், உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்கான தந்திரம் அது! அதைத்தான் பீகார் மாநிலத்தில் செய்தார்கள்; இப்போது மற்ற மாநிலங்களிலும் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

### S.I.Rக்கு எதிராக பெரும் புரட்சி!

பீகாரில், இதை செய்ய நினைத்தபோது, தொடக்கத்திலேயே தமிழ்நாட்டில் இருந்து முதல் எதிர்ப்புக் குரலை நாம் தான் பதிவு செய்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய காங்கிரஸ் பேரியத்தின் இளந்தலைவராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய ராகுல் காந்தி அவர்களும், பீகாரின் இளம் சிங்கமாக இருக்கக்கூடிய தேஜஸ்வீ அவர்களும், அந்த S.I.Rக்கு எதிராக அந்த மாநிலத்தில் பெரிய புரட்சியையே செய்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற நிலையில், தேர்தல் ஆணையம் அதற்குரிய பதிலைச் சொல்லவில்லை; உரிய விளக்கத்தையும் சொல்லவில்லை.

பீகார் போலவே, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களிலும், செய்ய நினைக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்தத்தான் நாம் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நேற்றைக்குக் கூட்டி தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

நாம் நடத்திய கூட்டத்திற்கு கூட இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க. அதில் பங்கேற்கவில்லை. இன்னும் ஓரிரு கட்சிகள் அதில் பங்கேற்கவில்லை. தேர்தல் ஆணையத்தில், இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் உள்ளபடியே அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### பா.ஜ.க.,வுக்கு பயப்படும் எடப்பாடி!

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய திரு. பழனிசாமி அவர்கள், இதில்கூட தன்னுடைய இரட்டை வேடத்தைக் காட்டியிருக்கிறார். பா.ஜ.க.,வுக்கு பயந்து, தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையை எதிர்க்கப் பழனிசாமி அவர்கள் பயப்படுகிறார்.

அதேநேரத்தில், அ.தி.மு.க. தொண்டர்களுக்காக ஒரு அறிக்கையையும் அவர் வெளியிட்டிருக்கிறார். இன்றைக்கு பத்திரிகைகளிலும் நீங்கள் பார்த்திருக்கலாம்.

## அ.தி.மு.க. - பா.ஜ.க. கும்பலிடமிருந்து தமிழ்நாட்டை பாதுகாப்போம்!

இது எதை காட்டுகிறது? தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையில், பழனிசாமி அவர்களுக்கு சந்தேகம் இருப்பதைத் தான் அது காட்டுகிறது! ஆனால், அவரால் வெளிப்படையாக இதை எதிர்க்க முடியவில்லை. தான், "பா.ஜ.க.,வின் பாதம்தாங்கி பழனிசாமி" என்பதை நொடிக்கு ஒருமுறை அவர் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

நான் உறுதியாக சொல்கிறேன், பா.ஜ.க. எப்படிப்பட்ட சதிச்செயலைச் செய்தாலும், அவர்களால் தமிழ்நாட்டில் எதுவும் செய்ய முடியாது என்பதை அழுத்தந்திருத்தமாக நான் குறிப்பிட விரும்புகிறேன்.

### பீகாரில் – மோடியின் வெறுப்புப் பேச்சு!

அதனால் தான் தங்களுடைய திட்டங்கள் தமிழ்நாட்டில் எதுவும் எடுபடவில்லை என்ற ஆத்திரத்தில் தான் நம் மீது இருக்கின்ற வன்மத்தில், இப்போது என்ன பேசுகிறார்கள், அதிலும் குறிப்பாக, பிரதமர் மோடி அவர்கள் சென்று பீகார் மாநிலத்திற்கு சென்று என்ன பேசியிருக்கிறார்? தான் எல்லோருக்குமான பிரதமராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடியவர் மோடி அவர்கள், ஆனால் அங்கே என்ன பேசுகிறார் என்று சொன்னால், தமிழ்நாட்டைக் காட்டி பீகாரில் வெறுப்புப் பேச்சைப் பேசியிருக்கிறார்.

"வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாட்டை" எல்லோரிடமும், சகோதரத்துவத்துடன் பழகும் நம்மைப் பற்றி, இந்த மண்ணில் வாழுகின்ற எல்லோருக்கும் நன்றாக தெரியும். கடந்த 1ஆம் தேதி வெளியான தினத்தந்தி நாளிதழில் கூட, பீகார் மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் அளித்த பேட்டியை நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள் – அதையெல்லாம் பார்க்கும் போது, எனக்கே பெருமையாக இருக்கிறது.

தமிழ்நாடு எப்படியெல்லாம் தங்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறது – தங்களுடைய வாழ்க்கைத்தரத்தை எப்படியெல்லாம் உயர்த்தியிருக்கிறது என்று மிகத் தெளிவாக பீகார் மக்கள் தமிழ்நாட்டில் வந்து பணிபுரியக்கூடிய, தொழில் செய்து கொண்டிருக்கக்கூடிய, வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய அந்த பீகார் மக்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால், பிரதமர் அவர்கள் பீகாரில், வாக்கு அரசியலுக்காக அங்கு சென்று நாடகத்தை நடத்தியிருக்கிறார்.

நான் கேட்கிறேன், பிரதமர் மோடி அவர்கள் பீகாரில் பேசிய அதே கருத்தை, இங்கே தமிழ்நாட்டில் வந்து பேச முடியுமா? பேசுவாரா? பேசக்கூடிய தைரியம் இருக்கிறதா? என்ற கேள்வியை தான் நான் கேட்க விரும்புகிறேன்.

யார் என்ன சதி செய்தாலும், எத்தனை அவதூறுகளை பரப்பினாலும், எவ்வளவு போலிச் செய்திகளை எல்லாம் அவர்கள் உருவாக்கினாலும், நான் தெளிவோடு சொல்கிறேன் – இங்கே நம்முடைய தொல் திருமாவளவன் அவர்கள் குறிப்பிட்டது போல, 2026ல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் இருக்கக்கூடிய ஆட்சி நிச்சயம் அமையும் அமையும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைக்கு அனைத்து சேனலிலும் "திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தது"! என்ற செய்தி தான் வரப்போகிறது! அதை நீங்கள் பார்க்கத் தான் போகிறீர்கள்.

தமிழ்நாட்டு மக்கள் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கையின் காரணமாக இதை நான் தெளிவோடு சொல்ல விரும்புகிறேன்.

ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைய நீங்கள் எல்லாம் உறுதுணையாக, உற்றத் துணையாக இருக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, 2021 தேர்தல், தமிழ்நாட்டை கொத்தடிமை அதிமுகவிடமிருந்து மீட்டிருக்கிறோம் 2026 தேர்தலில், தமிழ்நாட்டை பா.ஜ.க. அ.தி.மு.க. கும்பலிடம் இருந்து பாதுகாக்கக்கூடிய தேர்தலாக அமையப் போகிறது.

கலைஞரின் உடன்பிறப்புகளாக இருக்கக்கூடிய நீங்கள் நிரூபிக்கவேண்டும்; அதற்கான வெற்றிக்கு நீங்கள் உழைக்க வேண்டும்!

இந்த மகிழ்ச்சியான நேரத்தில், மணமக்களிடம் நான் அன்போடு, உரிமையோடும், மணியின் மீது நான் வைத்திருக்கக்கூடிய பாசத்தின் காரணமாகவும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள்; தமிழுணர்வை தமிழகத்தில் உருவாக்குங்கள்; அதற்கு நீங்கள் உறுதி தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக் கொண்டு, புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கக்கூடிய, "வீட்டிற்கு விளக்காய் நாட்டிற்குத் தொண்டர்களாய்"மணமக்கள் அனைத்து நன்மைகளும் பெற்று வாழுங்கள்! வாழுங்கள்! வாழுங்கள்! என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்திற்கு எதிராக

# ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!

## வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, நவ.4 -

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தையொட்டி வெளியிட்ட வலைதளப்பதிவில், "SIRக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!" என்று வலியுறுத்தியுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப்பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் SIRக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!**

**வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் குழப்பங்கள் ஐயங்கள் இல்லாமல் போதிய கால அவகாசத்துடன், 2026 பொதுத் தேர்தலுக்குப் பின்பு நடத்த வேண்டும் என்ற நமது கோரிக்கையை ECI ஏற்காததால், உச்சநீதிமன்றத்தை நாட இன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.**

**அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றுத் தங்களுடைய உணர்வைப் பதிவு செய்த 49 கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இக்கூட்டத்தில் பங்கேற்காதவர்களும் தங்களுடைய கட்சிகளில் SIR குறித்து விவாதித்து, ஜனநாயகத்தைக் காத்திடும் முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங்கள் – பரப்புரைகள் நடத்த வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்திட

# நவ.6 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம்!

## மூத்த அமைச்சர்கள் தலைமையில் நடைபெறுகிறது!

**சென்னை, நவ. 4 -**

**தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங்கள் மற்றும் பரப்புரைகள் நடத்த வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பதற்கு தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களுடனான ஆலோசனைக் கூட்டம் 6.11.2025 அன்று மூத்த அமைச்சர்கள் தலைமையில் நடைபெறுகிறது.**

கடந்த 27.9.2025 அன்று கரூரில் நடைபெற்ற அரசியல் பரப்புரை கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் சமீபத்தில் அறிவுறுத்திய தன்படி, தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங்கள் மற்றும் பரப்புரைகள் நடத்துவது குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பாக தங்கள் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை தெரிவிப்பதற்காக தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்றத்தில் உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஓர் ஆலோசனைக் கூட்டம் 6.11.2025 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10 ஆவது தளத்தில் மூத்த அமைச்சர்களின் தலைமையில் நடத்தப்பட உள்ளது.

இக்கூட்டத்தில் பங்குபெறக் கோரி அரசு தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அவர்களின் அழைப்புக் கடிதம் மேற்படி அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

---

### கடந்த 4 ஆண்டுகால தி.மு.கழக ஆட்சியில்

# நெல் கொள்முதல் அதிகரித்துள்ளது!

## 'தி இந்து' ஆங்கில நாளேடு பாராட்டு!

சென்னை, நவ.4-

தமிழ்நாடு அரசின் இலவச மின்சாரம், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் உள்ளிட்ட நடவடிக்கைகளால் தமிழ்நாட்டில் கடந்த 4 ஆண்டுகளில் நெல் கொள்முதல் விகிதம் உயர்ந்துள்ளதாக 'தி இந்து' நாளேடு பாராட்டியுள்ளது.

நெல் கொள்முதல் தொடர்பாக 'தி இந்து' ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள சிறப்புக் கட்டுரையில், தமிழ்நாட்டில் குறைவான அறுவடை நடைபெறும் பருவமான, ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான காலக்கட்டத்தில், நெல் கொள்முதல் விகிதம் கடந்த 4 ஆண்டுகளில் உயர்ந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டில் நடைபெறும் ஒட்டு மொத்த நெல் கொள்முதலில், குறைவான அறுவடை நடைபெறும் பருவங்களில், அதிக அளவில் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் விகிதம் கணிசமாக உயர்ந்துள்ளதாகவும் 'தி இந்து' நாளேடு தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 2021முதல் 2025 வரையிலான 4 ஆண்டுகளில் நெல் கொள்முதல் விகிதம் படிப்படியாக உயர்ந்துள்ளது என்று, ஒன்றிய உணவு தானியங்கள் கொள்முதல் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக 'தி இந்து' சுட்டிக்காட்டியுள்ளது. ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 2021-22ஆம் ஆண்டில், குறைவான நெல் அறுவடைப் பருவத்தில், 15.94 சதவீதமாக இருந்த நெல் கொள்முதல், 2022-23ஆம் ஆண்டில் 43.67 சதவீதமாக உயர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023-24ஆம் ஆண்டின் குறைவான நெல் அறுவடைப் பருவத்தில் 36.77 சதவீதமாக இருந்த நெல் கொள்முதல், 2024-25ஆம் ஆண்டில் 41.02 சதவீதமாக உயர்ந்துள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு 16 சதவீதத்திற்கும் குறைவாக இருந்த நெல் கொள்முதல், 2025ஆம் ஆண்டில் 40 சதவீதம் உயர்ந்துள்ளதாக 'தி இந்து' நாளேடு பாராட்டு தெரிவித்துள்ளது. நெல் கொள்முதலில் டெல்டா மாவட்டங்கள் அதிகபட்ச பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்கள் 24 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு சார்பில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம், தமிழ்நாடு முழுவதும் திறக்கப்பட்டுள்ள நெல் கொள்முதல் நிலையங்கள் உள்ளிட்ட நடவடிக்கைகளால் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் நெல் கொள்முதலின் அளவு அதிகரித்துள்ளது என்று 'தி இந்து' நாளேடு பாராட்டியுள்ளது.

---

### முதலமைச்சரின் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ்

# ரூ.7.23கோடி மதிப்பீட்டில் மரக்காணம் ஒன்றியத்தில் புதிய சாலைகள்அமைக்கும் பணிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார்.

திண்டிவனம் நவ. 4-

முதலமைச்சரின் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.7.23கோடி மதிப்பீட்டில் மரக்காணம் ஒன்றியத்தில் நடைபெறும் புதிய சாலைகள்அமைக்கும் பணிகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சிமற்றும் ஊராட்சி துறை சார்பில் மரக்காணம் ஒன்றியத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ்நகர் ஊராட்சி முருகன் கோவில் சாலை அமைப்பதற்கு ரூ.71.88லட்ச மதிப்பீட்டிலும், இராவனாபுரம்இருளர் காலனி ரோடு அமைப்பதற்கு 66.42லட்சம் மதிப்பீட்டிலும், 28.40லட்சம்ரூபாய் மதிப்பீட்டில் ஆலங்குப்பம் ஏந்தூர்சாலை அமைப்பதற்கும், 42.23லட்ச ரூபாய் மதிப்பீட்டு ரங்கநாதபுரம் கேகே மேடு சாலை அமைப்பதற்கும் 38 . 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊரணி பாலக்காடு சாலை அமைப்பதற்கும் 23.23 லட்சம் மதிப்பீட்டில் ஊரணி காட்டு கொல்லை சாலை அமைப்பதற்கும், 36.39 லட்சம் மதிப்பீட்டில் குரும்பறம் நடுக்குப்பம் சாலை அமைப்பதற்கும், ரூ.68.53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வடகரம் கிராம சுடுகாடு சாலை அமைப்பதற்கும், 49.86லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூனிமேடு கழுவெளி சாலை அமைப்பதற்கும், 109.80பத்து ரூபாய் மதிப்பீட்டில் அரசப்பூர் ராயநல்லூர் சாலை அமைப்பதற்கும், 61.58லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேப்பேரி குரூர் சாலை அமைப்பதற்கும் 61.58லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குரூர்வட நெற்குணம் சாலை உள்ளிட்ட 13ஊராட்சிகளில் புதிய சாலைகள் அமைப்பதற்கு பூமி பூஜை விழா மரக்காணம் ஒன்றியம் நகர் ஊராட்சியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார். துணை சேர்மன் பழனி முன்னிலையில் வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் அர்ஜுனன், ஊராட்சி மன்ற தலைவர் குமுதா ஜெயமூர்த்தி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு 13 ஊராட்சிகளில் 7 கோடியே 23 லட்சத்தி 89 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய சாலைகள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில்மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், ஒன்றிய கவுன்சிலர்கள் தேசம் பாலா, நாகஜோதி கணேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் திருமலை ஒன்றிய நிர்வாகிகள் செல்வம், பாபு, சுரேஷ்குமார், தேவதாஸ், வினோத், ஊராட்சி நிர்வாகிகள் சேதுபதி ராஜா, குமார், பூபாலன், சீனிவாசன், தகவல் தொழில் நுட்ப அணி சங்கர், எழிலரசன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.